ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2231/23 - 2021 ජූනි මස 11 වැනි සිකුරාදා - 2021.06.11

*2231/23 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல: 79

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**

**10(1) (ஆ) (II) ஆம் பிரிவின் கீழான விசேட பணிப்புரை**

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 10(1)(ஆ)(II)இன் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது எந்தவொரு அரிசி உற்பத்தியாளர், அரிசி ஆலை உரிமையாளர், நெல் மற்றும்/ அல்லது அரிசி சேகரிப்பாளர், பண்டகசாலை உரிமையாளர், விநியோகஸ்தர் அல்லது நெல் மற்றும்/அல்லது அரிசி மொத்த வியாபாரி தனது உடைமையில், பாதுகாப்பில், தனது கட்டுப்பாட்டில் காணப்படும் நெல் மற்றும்/அல்லது அரிசியை பண்டகசாலைகள், சைலோக்கள் (silos), களஞ்சியசாலைகள், கொள்கலன்கள்(Containers) அல்லது ஏதேனும் வேறு இடங்களில் களஞ்சியப்படுத்துவதாயின் அத்தகைய பண்டகசாலை, சைலோ (silo), களஞ்சியசாலைகள், கொள்கலன் (Container) அல்லது வேறு இடம் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையில் பதிவு செய்யப்பட வேண்டும் என பணிப்புரை விடுக்கின்றது.

மேலும், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையில் பதிவு செய்யாது எந்தவொரு அரிசி உற்பத்தியாளர், அரிசி ஆலை உரிமையாளர், நெல் மற்றும்/ அல்லது அரிசி சேகரிப்பாளர், பண்டகசாலை உரிமையாளர், விநியோகஸ்தர் அல்லது மொத்த வியாபாரி நெல் மற்றும்/ அல்லது அரிசியை தனது உடைமையில் வைத்திருக்க கூடாது எனவும் அத்தகைய பண்டகசாலைகள் சைலோக்கள் (silos), களஞ்சியசாலைகள், கொள்கலன்கள் (Containers) மற்றும் வேறு இடங்களில் மெத்தமாக அல்லது வேறு வகையில், காணப்படும் நெல் மற்றும் /அல்லது அரிசி தொடர்பான கையிருப்புக்களை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினால் கோரப்படும் போது வழங்க வேண்டும் எனவும் பணிப்புரை விடுக்கின்றது.

1A – PG 5412 – 225 (2021/06)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது அனைத்து அரிசி உற்பத்தியாளர்கள், அரிசி ஆலை உரிமையாளர்கள், நெல் மற்றும்/அல்லது அரிசி சேகரிப்பாளர்கள், பண்டகசாலை உரிமையாளர், விநியோகஸ்தர்கள், நெல் மற்றும்/அல்லது அரிசி மொத்த வியாபாரிகள் இந்த பணிப்புரை பிரசுரிக்கப்பட்டு 07 நாட்களுக்குள் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையில் பதிவு செய்வதுடன் தனது உடைமையில் மொத்தமாக அல்லது வேறு வகையில் காணப்படும் நெல் மற்றும்/அல்லது அரிசி கையிருப்புக்கள் தொடர்பான தகவல்களை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு உடனே சமர்ப்பிக்க வேண்டும் என பணிப்புரை விடுக்கின்றது.*

*நெற்பயிர்ச் செய்கையாளரால் தமது பயிர்ச்செய்கை நிலத்தில் இருந்து பெறப்பட்ட நெல் அறுவடை தொடர்பாக இப் பணிப்புரை செல்லுபடியற்றதாகும்.*

*இப் பணிப்புரை, 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.*

*பாவனையார் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி,*

மேஜர் ஜெனரல் **சாந்த திசாநாயக்க** (ஓய்வுபெற்ற),
தவிசாளர்.

கொழும்பு,
*2021, யூன் 11.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*